121332

O—,85MKR3
N11.
121332
1911

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# சுபத்திரைகல்யாணசரித்திர கும்மி.

விருத்தம்.

தவத்தினில்மேன்மைபெற்ற தருமனுக்கிளையோன்
தானும்,சுபத்திரைதன்னைமாலை சூட்டியகும்மிதன்னை,
இகத்தினில் யாவர்கட்கும் இயம்பிடவேணுமென்று,
அகத்தினிலாதிமூல ரருள்பதம் காப்புதாமே.

இதுவுமது,

நித்தியகல்யாணிவாணி நின்மலர்பாதம்போற்றி
சித்தினிசுபத்திரைதன் திவ்வியகல்யாணக்கும்மி
பத்தியாய்மொழியவேண்டி பதமலரடியணிந்தேன்
இத்தினமிரங்கியெந்த னிருதயத்திருப்பாயம்மா.

தாண்டவநித்தியகரி யென்றமெட்டு

எமுநாகல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

ஆதிமூலப்பொருளே அருள்புரிவாய்
ஆதிமூலப் பொருளே

அநுபல்லவி.

ஸோதிபிரகாஸா சுந்தரலீலா
ஸ[illegible]குர்தமாவந்தென்னை காத்தருள்லோலா

சரணங்கள்.

பக்த்தியென்னும்திவ்விய பாக்கியங்களையளிக்க
முக்த்திப்பொருள்சித்திக்க முன்னாலேவந்திடும் (ஆ)

சுபத்திரைகல்யாணகும்மியைமொழிந்திட
அபத்தமில்லாமல் காற்பாய்ஸ்ரீஹரி (ஆ)

---

மாதவங்கள்செய்து யென்றமெட்டு

கமாசு-இ-ம்-கும்மி.

இந்திரபிரஸ்தம்தன்னில்
எமசுதன் தர்மராஜன்
சொந்தமாகதம்பிமாருடன்
சொகுசாய்அரசாளுகையில் (இந்)

ஆலிலைமேல்பள்ளிகொண்ட
ஆராவமுதனையும்
கோவிஸதாஸ்துதிக்கும்
குந்திமக்களய்வர்களும் (இந்)

ஆரிலொருகடமை
அவரவரிடம்வாங்கி
ஸிராகராக்ஷியபாரம்
செலுத்திவருங்காலந்தனில் (இந்)

---

வாச்சாமகோச்சர யென்றமெட்டு

அபுரூபராகம்-நீத்திமதி,

பல்லவி.

வேதவியாஸர் விப்பிரர்வந்து
விதித்தமார்க்கத்தை விபரமாய்கேளும் (வே)

அநுபல்லவி.

பூதலந்தன்னில் புகழ்பெரவாழ்ந்த
புத்திரரைவரும் பூரிப்புடனேளும் (வேத)

சரணங்கள்.

உத்தமியானபாஞ் சாலிதன்னை
மைத்துனர்அய்வ ரிடத்திலிருக்க



சுத்தமதானமார்க்க மிதானும்
சொல்லும்வழியில் இருக்கவேவேணும் (வே)

---

சங்கரனே-சங்கரனே-யென்றமெட்டு,

வேதவியாஸ மகரிஷியை
வேண்டிடஅவர்களும் வந்திடவே
பாதங்களில்நமஸ் காரம்செய்து
பணிவிடையாவும் புரிந்திடவே (வேத)

ஆஸனம் தான்கொடுத்து
அவர்களைவீற்றிருக்கச்செய்து
பாசமுள்ளஉலகமதில்
பாங்குடன்நாங்களிருந்துவரும். (வேத)

விதிதனையேஉரைத்திடவே
வேண்டிநோம்நாங்கள்கைகூப்பி
பதியுடையபாஞ்சாலி
பாரியாளய்வர்க்காளாகி (வேத)

இருந்துவருகிராளதநாலே
யெங்களுக்கொன்றும்புரியவில்லை
வருந்திநோமுங்களைகேட்கவென்று,
வகையுடனுரைக்கவேணுமின்று (வேத)

விருத்தம்.

மங்குதலில்லாதிங்கள் மரபினிலுதித்தமைந்தா, ஓங்க
ளுக்குரைக்கும்வார்த்தைஉருதியாய்மனதில்வைத்து,
திங்கள்நற்முகத்திராளே த்ரௌபதாதேவிதன்னை,[ம்.
பொங்கமாய்ஒவ்வோராண்டு புரித்தவளிருக்கனன்று

---

ஆரண்யத்தில் ஒரரசன்னித்திரை யென்றமெட்டு

மோகனகல்யாணி.

யென்னப்பனேதர்மபுத்திரா இதைநீகேட்டிடுவாய்
யெழிலாமிந்தபாஞ்சாலிக் கியம்பிடுவேநேராய்(என்)

உன்னிதமாகவொவ்வோராண்டு தனில்தானும்
ஒவ்வொருவரிடத்திலவளு மிருந்திடவேணும் (என்)

அன்னவளைமற்றநால்வர் தாய்போலெண்ணவேணும்
அந்தவழிதவறினவர் ஆரண்யம்செல்லவேணும்,(என்)

இந்தப்படி அய்வர்களும் இருந்திடவேணும்
இப்போதெமக்குநேரமாகுது விடையளிக்கவேணும்.

எங்கள்மனதின்குறையை நீக்கினஹிருதயவாசிகளே
மங்களமாய்போய்வாருங்கள் மாமறையோர்களே(எ)

---

சாரங்க ராஜரடி யென்றமெட்டு

இந்துஸ்தானி கும்மி.

பள்ளியறைதனிலே பாஞ்சாலிதருமராஜன்
படுத்துனித்திரைசெய்கையிலே-யென்னேடி
பாதிநிசிநேரத்திலே (பள்ளி)

வேதியற்கிரகத்திலே விரும்பிதிருடர்வந்து
காராம்பசுக்களதை-யென்னேடி
கட்டவுழ்த்துப்போனாரென்று (பள்ளி)

அரமனைவாசலிலே அர்த்தராத்திரிவேளையிலே
அலரிபிராமணர்வந்து-யென்னேடீ
அர்ச்சுனராஜரிடம் (பள்ளி)

அரிக்கைதான்செய்திடவும்அருச்சுனனப்பொழுது
ஆயுதசாலையிலே-யென்னேடீ
அவசரமாய்சென்றானே (பள்ளி)

துள்ளிவில்லையெடுத்து பள்ளியறைதனிலே
வலசியுந்தமயனையும்-யென்னேடீ
வன்மையாய்பார்த்துவிட்டார் (பள்ளி)

அந்தணருடன்பசுவை அனுப்பிவிட்டவன்தானும்
அண்ணனடிபணிந்து-யென்னேடீ
ஆரண்யம்போரேனென்றான் (பள்ளி)



சொன்னபடிக்கோராண்டு தீர்த்தயாத்திரைபோக
விண்ணப்பம்பெத்துகொண்டு-யென்னேடீ
விரும்பிவனம்போனான் (பள்ளி)

---

வருவம்வாடி வனுதயேயென்றமெட்டு

எதுகுலகாம்போதி,

ஆபத்பாந்தவா அனாதரக்ஷகா
அடியேனுக்கருள்செய்திடுவா
சாபத்தைநீக்கும்பற்குணனெனக்குன்
சரணம்தவிரகெதிவேறில்லை (ஆபத்)

ஓங்கியஇத்தழைங்கிவனமிது
உயரமெத்தனை ஆகாசம்
தாங்கியதேக்குமரமிதைபார்க்க
சந்திரமண்டலமுலாவுதுபார்
தங்கியபலவிதவிருக்ஷமிருப்பதை
சரிவரசொல்லிமுடியாது (ஆபத்)

யானைபுலிகள்கரடிசிம்மம்
அலைந்துகொண்டுதிரிகிறதுகள்
அடர்ந்தவனத்தில்தபசிகள்ரிஷிகள்
ஆஸ்சிரமங்கள்பலதெரியுதுகள்
வானமளாவியஇந்தவனத்தின்
வண்மையதைநான் யென்சொல்வேன் (ஆபத்)

வேரில்பழுத்தபலாப்பழங்கள்
விந்தையானமாம்பழங்களும்
பெருகுஜிமாதுளைநம்பாகொய்யா
மேன்மையாம்சீத்தாகனிகளும்
வாரியெடுக்கமுடியாதிலந்தை
வகைவகையாநாவர்க்கனியும் (ஆபத்)

அதோதெரியுதேதுவாரகாபுரி
அவ்விடம்போகவேணுமே
சதோபநிஷத்துகள்சப்தம்கேழ்க்கும்

சர்ச்சனர்சந்தடிகாண்கிறது
நரிகள்ஒடுவதவ்விடமிருக்க
நன்மையுண்டாகுமென்றமர்ந்தான் (ஆபத்)

---

ஜோதிர்மயமான திருக்குடந்தையில்யென்ற
வர்ணமெட்டு-கும்மி.

கண்ணாயென்னசம்பா இருக்குரீர்
கவலையில்லாமல் இருக்குரீர் கவலையில்லாமல
பெண்ணாகிய சுபத்திரைக்கி
கல்யாணம்செய்யாமல் (கண்ணா)

பக்குவகாலமானபின்புவைத்திருக்கலாமா
கண்ணாநாம்வைத்திருக்கலாமா
இக்குவலையத்தரசரும்பிடம்
ஏராளமாய்வாரார் (கண்ணா)

இந்திரனுடையஇடுக்கம்தீர்த்து
இரக்ஷித்தாவர்சவன்பற்குணன்
சுந்தரமான அந்தவரனுக்கு
சுபத்திரையைத்தரலாம் (கண்ணா)

எந்தனுடையகருத்திலிருந்த
தெடுத்தூரினனே கண்ணா-நான்
உந்தனுடையஇஷ்டம்போலே
உகந்துசெய்திடுவாய் (கண்ணா)

பார்த்திபன்போல்கீர்த்திபெற்றவன்
பாரிலெங்கினுமில்லைகண்ணா-கேள்
நேத்தியானசுபத்திரைக்கி [ன், (கண்)
பாத்திரவானவன்கண்ணாகேள் பாத்திரவானவ

தந்தைதமயன்பந்துக்களை சபையில்
அழைத்திடுகண்ணா நீசபையில்
சிந்தையறிந்துஅவர்களையும்
சீக்கிரம்கேட்டிடுகண்ணாநீசீக்கிரம்கேட்டிடு (க)



எந்தன்கருத்தைஉந்தன்மனதில்யெப்போதும்
வைத்திடுகண்ணாநீயெப்போதும்வைத்திடு
அந்தரங்கம்உந்தனிடத்தில்
அறிவித்திருக்குரேன் கண்ணாகேள் (கண்)

விருத்தம்.

சுபத்திரை அன்னைதானும் சொன்னதைமாயோன் கேட்டு, அதத்தின்படியேசெய்வேன் அதற்குநீஅஞ்சவேண்டாம், இகத்தினில்பெருமைவாய்ந்த யெழில் பலராமன்தன்னின், கருத்ததையுமென்று கருதி நால்கபடநாயன்.

---

இம்மாத்திரம்செய்வாய் அருமைனேயென்றமெட்டு
சௌராஷ்டிர ராகம்.

இந்தசபைதனிலிருக்கும்
எனதுடையபந்துக்கள்மித்திரர்களுக்கும்
சொந்தமுடையஅத்தைபிள்ளை தரியோதனுக்கும்
அஸ்தினாபுரபட்டத்துக்குரியவனுக்கும்
யெட்டுதிசைகளிலும் கட்டிகொடிபரக்க
மட்டடங்காதசேனைவட்டகுடைநிழலில் (இந்)

தங்கைசுபத்திரையைநானே
கொடுப்பதென்றுயெங்கும் பத்திரிகையனுப்பத்தா
சொன்னமொழியைமங்குதலில்லாமலசெய்வீரே(னே
நடந்துகொள்ளஉங்களுக்கறிவித்தேன்தானே
இஷ்டமுடையவெகு பட்டவர்த்தனர்களும்
மட்டடங்காதரசர் கப்பனங்கட்டுகுரார் (இந்)

சிம்மசுக்கிலநவமியிலேமுகூர்த்தம்செய்ய
சம்மதமேயெனக்குத்தானே
ஆனதினாலேநம்மவர்களெல்லோருங்கூடி
சுபத்திரைக்கிகல்யாணம்செய்யவேணுமோடி.
யென்றுபலராமரும் அன்றுசபைதனிலே-நின்று
யெல்லோரும்கேழ்க்க நன்றுஉரைத்திடவே (இந்)

விருத்தம்.

அன்னவனு முரைக்கக்கேட்டு அச்சபைதன்னில்கண்ணன், என்னுடைகருத்தைக்கேளும்இன்பமாஅத்தைபெற்ற, மன்னவன்பார்த்தனுக்கு மணமதுசெய்யவேணும். அவன்தன்னையும்தள்ளி நாமும்தவறிடலாகாதென்றார்,

கெங்காதராபார்வதிசமேதாவென்றமெட்டு

அமீர்கல்யாண ராகம்,

என்னவார்த்தைசொல்லவந்தாய்நீயே
கிருஷ்ணா நீயே
அன்னீதமாகஉரைத்தாயே (என்)

பஞ்சவர்க்குகொடுக்கநினைத்தாயே
சுபத்திரையைநீயே
இந்தவஞ்சகம்செய்யஇருந்தாயே (என்)

மாசபையிலிருக்கும் மந்திரிபிரதானிகளெவரு
இதனைக்கோரும் [ம்
மணவோலையெழுதிவிடும்நீரும் (என்)

பருதிகள்சூழ்ந்த உலகத்தைதாங்கினதாரு
கிருஷ்ணாஆரு
துரியோதனனுக்குநிசயம்பாரு (என்)

அதுபோலேவிவாகபத்திரிகையனுப்பவேணும்
கிருஷ்ணா நீயும்
மெதுவாகஇருக்காதேநீதானும் (என்)

எட்டுதிக்கிலுள்ளபட்டவர்த்தனர்யாரும்
வந்துசேரவேணும்
யென்றெழுதிஅனுப்பிநார்கள்தானும் (என்)

விருத்தம்.

வாரிதிசூழ்ந்தஇந்த வையகமன்னருக்கெல்லாம். சேதிகளனுப்பச்சொல்லி சிறுநுதற்செல்விக்காக, பா



ரியபிரயாகைதன்னில் பர்குணன்கேழ்விபட்டு, நேரிலேமாயோன்தன்னை நினைத்துஸ்தோத்திரங்கள் செய்தான்.

மாதவமே இவ்வுருவாய்வந்தது யென்றமெட்டு

எதுகுலகாம்போதி.

மாதவனேகோவிந்தா மங்கைமணவாளா
யென்மனதிலுள்ளகுறையதனை நீக்கிடுவாய்லோலா. ()

ஆதாரம்வேறொன்றில்லை அடியேனுக்குத்தானே
இந்தஆபத்துவேளையிலே வந்திடும்சிமானே (மாத)

ஆதியிலேசுபத்திரையை யெனக்கென்றுரைத்தீரே
இப்போதறவக்கொடியோனுக்குமணம் சூட்டுகிறதா
[ரே (மாத)

வேதியர்களிவ்விடத்தில் மொழிந்தார்களென்னிடத்தே
விண்ணோர்க்குஅமுதளித்தமெய்யனேஎன்னிடத்தே. ()

கோவர்த்தனக்கிரியை குடையாகபிடித்தீரே
எங்கோபாலாஇத்தருணம் வந்திடுமென்னிடத்தே (மா)

வேதமொழிதவறினும்முன் வாக்குபழுதாமா
வேறேஒருவர்கெதி இல்லைரகுராமா (மாத)

சுபத்திரையைமாலையிடாமல் போனால்நானும்
இகத்திலெந்தன்உயிர்விடுவேன்சத்தியமிதானும் (மா)

யென்றுபற்குணன்ஓலமிட்ட தெம்பெருமான்கேட்டு
நன்றென்றுருக்மணிக்கிநவிலுகுறார் வேட்டு (மாத)

பாராயப்பாமண்டபந்தன்னையென்றமெட்டு

கமாசுராகம்-பல்லவி.

பார்த்தனிடம்போய்வருகுரேன்
ருக்மணிஇப்போ (பார்)

அநுபல்லவி.

தீர்த்தயாத்திரைசெய்யவந்து
நிகைத்திருக்கான் பிறயாகைதனில் (பார்)

சரணங்கள்.

என்னைநினைத்துகொண்டு இருக்குறான்ஜெபமதிலே
அன்னவனைபார்த்துவருகுறேன் ருக்மணிஇப்போ.()

பயணமென் ரதத்தில் பாங்காயாரோகணித்து
தயங்கிடும்பற்குணனிடம் தான்தோன்றிடவே (பா)

விருத்தம்.

மனதுனொந்து தயறமதாஇருக்குகின்ற
மாசில்லாபார்த்தனையும் பார்த்துமாயோன்
தனதாகநாகிருக்க தயங்கவேண்டாம்
தன்னுடைய இஷ்டமதுதவருண்டாமோ

---

மோகனம்-ராகம்-பல்லவி.

கண்ணா மணிவண்ணா கடை
கண்ணால் பாரென்னை (கண்ணா)

அநுபல்லவி.

அன்னாளில் சுபத்திரையை
அளிக்கிறேன் உனக்கென்று (கண்ணா)

சரணங்கள்.

சொன்னமொழிதவரி
துரியோதனனுக்குபதரி
அந்தகன்னிகையைமாலையிட கடிதமனுப்புவானே.

எங்களைகார்த்திட்டஏழைபங்காளா
யெளியேன்முகம்பாரும்கருணைபுரிநீரும்
இப்பவேசுபத்திரையை-ஒப்பித்திடவேணும்(கண்)

யெத்தனையோசங்கடம் யெங்களுக்குவந்ததை
அத்தனையும்நீக்கி ஆதரித்தீரெங்களை
இத்தருணம்மெத்தவுமே சித்தமிரங்கிடும் (கண்)

O-175 MKR 3,S
N11 91



பச்சைமலைபவழமலை யென்றமெட்டு

கும்மி.

பாரிலுனக்கென்னபயம் பார்த்திபனேகாணும்
அந்தபைங்கிளியாம்சுபத்திரையைமாலையிடத்தானும்

என்னுடையதமயனவன் யென்னவிதமாக
யெழுதினான்மணஓலையெல்லோர்க்குமுன்பாக,

அன்னவர்தன்கருத்ததுபோல்நடவாதொருக்காலும்
அதற்கொன்றும்அஞ்சவேண்டாமெந்தன்மொழிகே
[ளும்.

121332

சன்யாசிவேடமதாய்நீஇருக்கதானும்
சகலர்களும்பார்த்துஒன்னை பணிந்திடவும்வேணும்.

ஒப்பிடயென்ப்ராதாவை அழைத்துகொண்டுவருவே
அப்போதுஒந்தனையும்காட்டிஒப்பித்திடுவேன். [ன்

அந்தக்ஷணம்உனையழைத்து அரமனைபோவார்கள்
அருங்கிளியாம்சுபத்திரையை அடைக்கலம்வைப்பா
[ர்கள்.

அந்தபுரந்தனிலே நந்தவனமதிலே
அவளும்நீயும்வீற்றிருக்கவிதித்திடுவார்நாளே,

என்றுசொன்னஉடன்சன்யாசிவேடமதைபூண்டு
இலங்கும்காவிவஸ்த்திரம் தண்டம்கமண்டலமும்கொ
[ண்டு.

மாதவன்மொழிந்ததனை மாமறையென்றெண்ணி
மனமதனைஅடக்கிபிர்ம்ம நிஷ்டையதனைநண்ணி,

பிர்ம்மநிஷ்டையில்மனம்பிரியாமல்நிருத்தி
கர்மானுஷ்டானங்களை கருதிடாமலகத்தி,

ஏகாந்தநிஷ்டையதை யெல்லோர்களும்பார்த்து
மோகாந்தகாடதனை முற்றிலுமேவிடுத்து.

சகலர்களும்வந்துஇந்த சன்யாசியையடுத்து
சாஷ்டாங்கநமஷ்காரம் செய்துமனங்குளிர்ந்து.

கணக்கில்லாதவேதியர்கள்கண்டவரைபணிந்து
காக்ஷிபதாய்துவாரகையிலுள்ளவர்கள்வந்து.

கெங்கைகரையில் மகாசங்கமதாய்கூட
அங்கேபற்குணன் திவ்விதமாயிருந்ததனைநாட.

இந்திரன்மகனைமனம் தேற்றிபரந்தாமன்
இருக்கும்படியேற்படுத்திஅரமனைக்கிவந்தார்.

---

திருக்குடந்தைவாசியடியென்ற

கும்மி.

கெங்கைக்கிபோய்ஸ்தானம்செய்து வருவோம்வாங்க [ளன்று
தங்களுக்குரியரதகஜதுரகபதாதிகளுடனன்று.

யெங்கும்கியாதிபெற்றிடும் நம்முடையாதவர்களுடனே
தங்கிசங்கல்ப்பம்யாவும்செய்து சந்தோஷமாகவுடனே.

அங்கேயிருந்தவர்யாவரும்கூடி கெங்கைகரைவந்தார்
மங்களமாகஸ்தானம்செய்து மகிக்ஷியாகஇருந்தார்.

பாலசன்யாசிதபஸில்இருப்பதைபலராமர்பார்த்து
கோலமானநமதரண்மனைக்கி இவரை கொண்டுபோக [வாமழைத்து.

மங்கைசுபத்ரைஇருக்குமிடத்தில்வசிக்கலாமிவர்வந்து
அங்கேஅழைத்துகொண்டுபோகலாமன்புடனே துணி [ந்து.

அண்ணனுரைத்தமொழியைகேட்டு கண்ணன்பதில் [சொல்வார்
என்னவார்த்தைசொல்லவந்தீர் யெற்காதுபோங்கள்.

மருத்துவமுள்ளசன்யாசியைநாம்சுபத்ரைஇடத்தினிலே
வைப்பதுசரியல்லயென்று தோணுதுவையகமதிலே,

உங்களுடையவார்த்தைஒன்றும் உபயோகமாகாதே
பங்கமாயிசொல்வந்தாலது பாரினில்தாங்காதே.



அப்படியெனக்கு குறைவுவந்தால்செப்பலையாரிடமும்
இப்பவேசன்யாசியைரதத்தில் யெழுந்தருளச்செய்யும்

சொன்னவுடனேபாலசன்யாசியைதூக்கிரதத்தில்வைத்து
உன்னிதமாகதுவாரகைவந்து உடனே தான்வசித்து.

இந்திரலோகத்தில்பார்த்திருக்குறேன்இந்தசாதுவை
அந்தசமயம்நாரதர்வந்துஅப்போதுரைத்திடவே.

நந்தவனத்தில்அந்தபுரத்தில் சுபத்திரைஇடந்தனிலே
இந்தசாதுவைஒப்பித்தார்கள் அவளிடமதனிலே.

சிஷ்ருஷையாவும்சரிவரசெய்து கொண்டுவருகிறோ
சிந்தைமகிழ்ந்துபணிவிடைசெய்து தினமும்வருகை [யிலே.

---

மார்கழிமாதம்திருவாதிரையென்றமெட்டு

எமுனாகல்யாணிராகம்.

கண்ணூடந்தனுடன்பெண்ணைபிரந்து
யென்னைகாட்டிக்கொடுக்காதே
சின்னமனிதன் துரியோதனுக்கு
யென்னைகன்னிகையாக்காதே (கண்)

மன்னன்பார்த்தனல்லாமல்பின்னொருவர்முகம்
மதித்துநான்பாரேனே
கன்னல்வில்லையுடையமாரன்
வாளியால்கவலைப்படுகுறேனே (கண்)

தெளிந்தமதியும்செந்தணலாகுதே
தேன்மொழிக்கிப்போதே
தென்றலென்மீதில்சீறிபாயுதே
தெய்வமிதற்கொப்பாதே (கண்)

தேசிகவரனேபலதீர்த்தங்கள்
சென்றுவந்தேனென்றீரே
வாசவன்மைந்தனைபார்த்ததுண்டா
நீர்வண்மையையுரைப்பீரே (கண்)

மன்மதனொந்துஉருகிடவேண்டாம்
மாமதிமுகத்தாளே
தனஞ்சயனிடம்நான்பிரயாகைதனிலே
தனித்துப்பேசினேனே. (கண்)

உந்தனுடையமனதிலிருப்பதை
உரைத்திடுஇப்போதே
அந்தகாரியம்முடியும்படிநான்
அனுக்கிரகிப்பேன்மாதே. (கண்)

மாதவமுனியேபற்குணனுக்குநான்
மாலைசூட்டவேணும்
பூதலந்தன்னில்தவரிடுமானல்
போக்குவேன்உயிர்நானும். (கண்)

மோதமர்அண்ணன் துரியனுக்கென்னை
முகூர்த்தம்வைத்திருக்கராரே
வாதனைநீக்கிடும்ஸாதுவேயென்னை
வைத்துமேகாற்பீரே. (கண்)

பூதலமரியாதவற்குமுன்னே
மாறதமதிலென்னை
சோதனையாக தூக்கிசெல்லவேணும்
சோதிக்கவேண்டாமென்னை. (கண்)

ஆலைவாய்கரும்புபோல்ஓலமிட்டழுவதை
பாலசன்யாசிபார்த்து
நாளைவருவாய்சுபத்திராநீயும்
நன்மையடைவாயேர்த்து. (கண்)

---



யாலரா நாவை யென்றமெட்டு

இந்துஸ்தானிகாப்பி.

பல்லவி.

நந்தநந்தனஸ்ரீ வைகுந்தமாதவா

அநுபல்லவி.

இந்தவேளையில்வந்து எளியேனைகாத்திடு (நந்)

சரணங்கள்.

சுந்தரமாகியசுபத்ரையைக்கண்டு
யெந்தன்மனமுருகி இருந்திடுமெந்தனை (நந்)

மன்மதபாணம்பார்பில்பட்டுருகுதே
பெண்மயலாலேபுலம்புரேநானே. (நந்)

பார்த்தன்படுந்துயரம்பக்தவஸ்லா
தீர்த்தகரையில்வந்துதெரிவித்தசீலா. (நந்)

காமபாணமது ராமபாணம்போலே
தாமதிக்காமல்தகிக்கிதென்மேலே. (நந்)

அருணோதயகாலமாகுதேன்செய்வேன்
தருணத்தில்வந்தென்னைகார்த்திடிலுய்வேன் (ந)

விருத்தம்.

இவ்விதம்பார்த்தன்தானும் இரவினில்நித்திரைய ன்றி, செவ்வையாஹரிபதத்தை ஸ்மரணைதான்செய்து நிற்க,சவ்வியசாசிதன்னை சார்ந்திட்டாள்சுபத்திரைவந்து, ஒவ்வியமாதேயுந்தவிஷ்டத்தை உரையுமென்றான்.

---

எந்தனூரு கூன்கிழவா யென்றமெட்டு

கும்மி.

அருணோதயமதனில்சுபத்திரை அதிதிஇடம்வந்து
தருணமரிந்துபூஜைசெய்து சந்தோஷமாஇருந்து

யெந்தனுடையகுறையைநீக்கி ரக்ஷித்திடுமய்யா
அந்தரங்கமுரைக்கிறேநா னடியாளுமெய்யா

அரவக்கொடிதரித்த துரியோதனனுக்கென்னை
உறவினர்கள்கூடி முகூர்த்தம்வைத்திருக்கார்முன்னே,

கேட்டதுமுதல்வாட்டமடைந்து கிலேசப்படுகுறனே
சாட்டையில்லாபம்பரம்போல்காட்டமானேனே

இந்திரன்வருணன்குபேர னானாலுமென்னைதானினைக்க
யெந்தனுக்குரியஅத்தைபிள்ளைசுப்பிரதீபமிருக்க

பார்த்தீபனென்றும்பற்குநனென்றும் பத்தழகுள்ளவர்
கீர்த்தியானசிங்கமெனக்குகிடைக்குமோதானே

பெண்ணேஉனக்குயேன்பயித்தியம்பிதற்றுகுறாயே
அன்னஆகாரமில்லாமலிருக்கும்அக்தியைகுரித்தாயே

யெட்டுதிசையும்துரியோதனன்பட்டம்ஆளுறானே
அட்டிஇல்லாமல்அவனுக்குநீமாலைஇடலாமே

இதற்குத்தானுஉமக்குபணிவிடைகள்செய்தேனே
குதற்கமாவேறொருவர்கூறினால்குரடாவாலடிப்பேனே

வல்லிகொடியின்வாய்மைகேட்டு துள்ளிசிரித்தானே
பல்லிநொளிவைபார்த்தஉடனேபாவைமயங்கினாளே

கையில்காண்டீபமேந்திஇருந்தகருப்பைபார்த்தாளே
மெய்வாய்கண்கால்முழுதும்மேவிநின்றாளே

தாமரைமலர்போலேமேனிதகதகவென்றதை
மாமலர்சூடியசுபத்திரைகண்டுமயங்கிநின்றாளே

கட்டியணைத்துமுத்தமிட்டுகளிப்படைந்தாளே
மட்டில்லாதஆனந்தங்கொண்டு மகிக்ஷியாசென்றாளே,

---

இந்தவார்த்தைசொல்லலுமே யென்றமெட்டு

கும்மி.

எந்தனுடதம்பியே கிருஷ்ணநாமும்
இப்போதேஸ்வேதநீவு போகவேணும்



சொந்தமுள்ளயர்தவர்கள்பந்துகளுக்கும்
துரிதமாய்சேதிசொல்லிஅநுப்பவேணும்

வல்லபமானஅண்ணசொல்ப்படியே
யெல்லோரும்வந்துகூடினார்கள்தனியே

யானைகுதிரைஒட்டைபரியர்வற்றுடனே
சேனைபரிவாரங்கள்சிறந்துதானே

யெங்களுடையப்ராதாஅண்ணா இப்போது
தங்கைசுபத்திரையையெங்கேவைப்பது

மங்கைசுபத்திரைதானெங்கிருப்பாளே
மகிக்ஷியாநாமெல்லோரும்போனாலே

யெந்தனைகேட்டதென்னதம்பிமாதவா
அந்தஸாதுவினிடம்வைக்கலாகாதா

அண்ணாநீர்சொல்லும் வார்த்தைநன்றாயில்லை
யென்னாலேகெட்டுதென்று சொல்லாதீர்பின்னே

பாலசன்யாசிஇடம்வைக்கலாகாது
காலமுழுதும்பழிவார்த்தைபோகாது

அருமைசன்யாசியென்றுநினைக்கலாமா
ஒருவயதுபெண்களை ஒப்பிக்கலாமா

சுத்தபிர்ம்மம்தவிர மற்றதேவர்கள்
சித்தஜன்கணைக்கஞ்சி வாடுறார்கள்

யென்னமோசொலகுறேனென்றெண்ணாநீரே
பின்னால்வரப்போறதைபார்த்திடுவீரே

யென்றமொழியைகேட்டு ராமரப்போது
நின்றுபுன்சிரிப்புடன்சொல்வாரீது

தம்பிகிருஷ்ணாஇதைக்கேளும்நன்று
நம்பிகெட்டவர்களுமேஉண்டா,

கண்டிந்தசன்யாசியை சொல்லலாமா
பெண்டாளவந்தவ ரென்றெண்ணலாமா,

அண்டர்முதல்யாவர்களு மவரிடத்தே
கண்டுபணிந்திடுவார்கள்அடுத்தே.

அருகில்நிற்கின்றசுபத்திரையேஅம்மா
அகதிக்கிபணிவிடைசெய்துவாசம்மா.

நந்தவனத்தினில்போய்இருந்துகொண்டு
அந்தரங்கபக்தியாய்நடந்துகொண்டு.

இருந்துகொண்டுவருவாய்சுபத்திரையே
அருந்தவம்செய்வதிலும்பலனில்லையே,

நாங்கள்போய்வருகுறோமென்றுஉரைத்து
நடந்தார்கள்ஸ்வேததீவைகுரித்து.

ரதகெஜதுரகபதாதியுடனே
நடந்தார்கள்ஸ்வேததீவ்ப்ரதக்ஷணமே.

---

மாப்பிள்ளைதானப்போவந்து யென்றமெட்டு

கும்மி.

மாதவர்ருக்குமணியுடன் பாதிநிசியில்யெழுந்திருந்து
தாருகன்தேர்விடஅதன்மேல் துவாரகைதான்வந்து.

அந்தநிசிநேரத்தில் யாருமறியாரே
நந்தவனமதிலே வந்துசேர்ந்தாரே.

இந்தபெரியவரை கண்டுஅப்போதே
வந்தனம்செய்யென்று ருக்மணிக்குரைத்தாரே.

பாண்டவவீரனவன் ஆண்டவனைகண்டு
வேண்டிஇருபதத்தைபூண்டாநகைகொண்டு.

பூண்டசன்யாசி வேஷத்தைகண்டாளே
அண்டையில்நின்ற ருக்மணிசிரித்தாளே.



சித்தையிலிந்திரனை வந்திடவேணுமென்று
நந்தமுகுந்தன் நினைத்தாரப்போது.

தேவர்ரிஷிமுதலிந் திராணியுடன்தானே
ஆகண்டலவன்அங்கே வந்துஉதித்தானே.

கங்கைமுதல்தீர்த்தங்களை அங்கேவரவழைத்தே
தங்கையொடுபார்த்தனுக்கும் மங்களஸ்தானங்கள்.

பொங்கிடும்ருக்மணிசெய்வித்தாளப்போதே
தங்கியதம்பதிகள்சந்தோஷமானாரே.

எங்கும்விலைமதிக்கா தாபரணம்தன்னை
இந்திராணிபோட்டழகைபார்த்தாளேமுன்னே.

தேவர்கள்தரிக்கின்ற ஆடையுடுத்தி
திகழும்பலதினிசிஹாரங்களும்சாத்தி.

துந்துபிமுதல்வாத்தியங்கள் அந்தரத்தில்வாசிக்க
மந்தாரமலர்களை வாரிவாரிசொரிய.

வேதமந்திரங்களை ஓதவேயெல்லோரும்
காதலோடுமாங்கல்ய தாரணம்செய்தார்கள்.

மாணிக்கஹாரத்திகள் மாதர்களெடுக்க
மங்களம்சிந்தித்து தங்கையுடன்பார்க்க.

வந்திருந்ததேவர்களை நந்தமுகுந்தன்
தந்துவிடையளித்து வந்துசயனித்தார்.

விருத்தம்.

ஹரியுமேநித்திரைபோக ஆதபனுதயமானான், கருமங்கள்தவரிடாமல் ராமர்காலத்திலெழுந்துசெய்தார், நருமலர்சுபத்திரைதன்னை ரதத்தின்மேல்பார்த்தன்வைத்து, கருமுகில்போலேதேரை கணத்தினில்செலுத்தினானே.

---

### வண்ணத்தரு-தோடி-இ-ம், ஆதிதாளம்,

### கண்ணிகள்.

எடுத்தானேசுபத்திரைதனை ரதத்தில்வைத்துமேவெளி
[ப்படுத்திட
அடுத்தார்கள்பற்குணனை வழிமரித்துகாவலர்தடுத்தி
[டவெகு
தொடுத்தார்கள்வாளிபிலில்சரம் அடுக்கடுக்காய்விடு
[த்திடஅவர்
மதகரிகள்பரிகள் ரதசிறைகள்வறவும்
ரதகஜதுரகபதாதிகளையும் (யெடு)

கண்டானேஅர்ச்சுனனுமதை கடுத்துமேமனம்கொதி
[த்திடநிரை
கொண்டானேவாளிபினில்சரம்தொடுத்துஅத்தனைமா
[ரதவீரரை
அடிகள்முடிகள்பலகொடிகள்தடிகள்பொடி
கடிதினிலவர்களை படிமிசைபோக்கி (யெடு)

விடுத்தானேரதமதனை அதிவேகமதாகவே பூமியதிர்ந்
[திட
அடுத்தானேகங்கையினிற்போய் அங்குவசிப்பவர்இங்
[குஇவனை
விடுத்திடபோமோயென அடுத்தஅத்தனைவீரர்களையும்
தவிடுபொடிகள்பட உதரி உதரி யெரி
தவிடுஉமியுமென பற்குணன்சாடிட (யெடு)

குய்யோமுறையோவென சூரியராமர்சைனியம்ஓடிட
அய்யோஅகதியென அங்குஉரைத்ததுபங்கமதாச்சுதே
பொய்யோநான்சொன்னமொழி அய்யமென்னதான்
[அண்ணுவேஇது



வையகமுள்ளவர்யாவரும்வந்து யெதிர்த்திடநய்ந்து
[போவர்கள்
தய்யல்சுபத்திரையைஅய்யமில்லாமல்
மெய்யாகவேகொண்டு போகுராநற்சுனன்(யெ)

இப்பவேதூதர்களேபோய் ஒப்பியுமிந்திரபிரஸ்த்தம
[தனிலே
செப்பினேன்பற்குணனெனவே பக்குவமாயென்அண்
[ணனிடத்திலே
தப்பிதள்சுபத்திரையெனும்தோகையைநான்மணம்பு
[ரிந்தசேதியை
சென்றுஅவ்விடம்ஒன்றுவிடாமல்
கண்டுபோல்மொழிஇன்றுபோய்சொல்லிடும்(யெ)

---

### கையறவிலாத நடுகண்புருவயென்ற மெட்டு

### கும்மி.

தர்மபுத்திரமகாராஜ ராஜசரணம்
தங்களுடையதம்பிபற்குணன்சேதிசொல்லவந்தோம்.
அருமையுள்ளசுபத்ரையைமணம் புரிந்துகொண்டார்
அதோவருகுரார்கள்தெரிவித்துவாவென்றார்.
கேட்டஉடன்பீமராஜன்தம்பிகளுடன்வந்தார்
கீழேஇரங்கிநமஷ்காரம் செய்துகொண்டார்.
ஒருவஸ்ஸரம்நடந்த விர்த்தாந்தங்களைமொழிந்தார்
பெருமையுள்ளஇந்திரபிரஸ்த அரமனைவாசல்வந்தார்.
துரோபதைசுபத்திரையை தூக்கிமெள்ளவிட்டாள்
துரிதமுடன்தருமனுமே தம்பிகளுடன்போனார்.
துவாரகாபுரியிலிருந்து தூதர்களுமோடி
பிரயாகைதனிலிருக்கும் ராமருடன்கூடி.

அர்ச்சுனராஜன்அகதியாய்வந்துஇருந்து [ரிந்து
அருமையுள்ளசுபத்திரையை அழைத்துபோனதுதெ
எங்களால்கூடியவரையில் யுத்தமதுபுரிந்தும்
யியலாமல்போய்விட்டதும்கூட்டிப்போனார்துநிந்து.

பாராமல்தூதர்வந்துசொன்னமொழிஏர்த்து
நாராசம்காச்சிசெவியில் விட்டதுபோல்பார்த்து.

தம்பிகோபாலனைதான் கெம்பீரமாய்பார்த்து
வெம்பிஇருகண்கள்கோவக்கனியதுபோலார்த்து.

கொஞ்சம்இரக்கமில்லாகோபாலாநீயே
குடியில்பிரந்தாளைஇவ்விதம்செய்தாயே.

மதியில்லாவார்த்தைதனைமொழியாதேயெங்கிடத்தே
சதிகள்வருமென்றுநான் சொன்னனேஉங்கிடத்தே.

முன்னால்நான்சொன்னசொல்லையெங்காமல்போநீரே
யென்னாளும்குலத்துக்கீனம்செய்துவைத்தீரே.

யெதிதிகள்வலிக்குமிடம் நதிக்கரையில்தானே [னே.
பதியில்அழைத்துப்போய் கன்னிகையைஒப்பிப்பா

விதியினால்வருகிறதை மதியால்வெல்லபோமா
கெதியென்றுநினைத்துகொள்ளும் கிலேசப்படலாமா.

---

ஆரென்றுவிரட்டுகுராயேமா யென்றமெட்டு

கமாசுராகம் பல்லவி.

ஆரென்றுநினைத்தானவன்யென்னை (ஆரெ)

அநுபல்லவி.

அர்ச்சுதன்மகனைஇப்பபக்ஷணம்
செய்குரேன்பாரு. (ஆரெ)



சரணங்கள்,

இப்பவேஅவனுயிரைஒப்பிக்கிரேன்எமகிடம்
தப்பிதம்செய்தவனைநான் எப்பவும்விடுவேனோபார்
தப்பியேதேவர்கள்வந்து காற்கினும்அவனைஇன்று
செப்பமுடியாதவிண்ணில்சேர்த்துவிடாமல்போநால்.

போதும்போதும் நிருத்தும்அண்ணா
வெகுபுத்திசாலித்தனமாக இப்பநீருரைத்தமொழி. ()

எதுமரியாதவரேஇந்திரன்மகனைகொன்றால்
இளங்கைம்பெண்ணம்முடைய சுபத்திரையாகுங்கண்
மேதினியுள்ளலவுமேவாதனைக்கிடமுண்டாமே[டாய்
விருதாவில்கோபமென்ன சரிசரிநிருத்திடும் (போ)

மாதவனேதம்பிகோபாலா இவ்விதவாதனைக்
கிடமாகவே ஸாதுவென்றுவரலாமா (மாத)

பூதலமீதினிலிந்தபுதுமை நடந்திடுமா [தான்
இந்தபொல்லாதவனைகொன்றால்பெல்லாருக்கும்சுமதந்
பாதகனைநினைத்திடபதைக்குதென்னெமிப்ப
பாரினிலிவனைவிட யாரிவ்விதம்செய்திடுவார் (ஆரெ)

---

மையாடியகண்டன் வளர்பாகயென்றமெட்டு

தேவாரபண்,

அன்னைதந்தையாவர்களும் ராம்கிட்டவந்து
யென்னஇதுபுதுமையென யெண்ணிமனம்நொந்து:

முன்னேஅயன்விதித்ததுபோல் முடிவதுவுமரிந்து
மோதுகுராய்ராமாநீ முன்கோபமடைந்து.

சங்கையில்லாமல் அந்ததனஞ்சயனைகொன்றாலே
தங்கைசுபத்திரையும் தலையைவிரிப்பாளே.

மங்கிதேவகீஉயிற் மாய்த்திடுவாள்நாளே
அங்கேகுந்திஅய்வர்களும் அப்போதுய்யுவாளே.
எங்கெங்கும்வசையாமே யெண்ணிப்பார்ராமா
பொங்குதலடங்கிடும் பொருத்திடவேண்டாமா.

கண்ணேடுயாதவர்கள் இந்திரபிரஸ்த்தம்நடந்து
மன்னரொடுசேனைபரிவாரங்களும்வந்து.
இந்திரபிரஸ்த்தம்வந்து யெல்லோர்களும்சேர்ந்து
சுந்தரிசுபத்திரைக்கி மாலையதுபுனைந்து.

வேதபிராமணர்கள் ஆசியதுகூர
வேண்டியசீர்வரிசை விதவிதமாய்தர
அவரவற்குதகுந்த மரியாதைகளும்செய்து
அனுப்பவிடைபெற்று வந்தார்களப்போது.

மங்களம்.

ஸ்ரீராமர்கண்ணனுக்கும் ஜெயமங்களம்
அந்ததிவ்வியகுணதேவர்கட்கும் ஜெயமங்களம்
பாராளும்மன்னர்கட்கும் செயமங்களம்
அந்தபாண்டவர்களும்வாழ ஜெயமங்களம்
திரௌபதாசுபத்திரைக்கும் செயமங்களம்
தினமிதைகுதித்துபாட சுபமங்களம்

சம்பூரணம்.

121332
O.125M K3,5
N"